மின்சாரம் சென்று கொண்டிருக்கிறது என்று நினைக்கின்றேன். ஆக, விவசாயத்திற்காக 9 மணி நேரம் மின்சாரம் கொடுப்பது போக, இருமுனை மின்சாரம் கொடுக்கின்றபோதுதான் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன. ஒரு சில இடங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. அதை ஆய்வு செய்து, செலவு அதிகமானாலும், தனி feeder போடுவதற்கும், தனி transformer போடுவதற்கும் உரிய முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம். எனினும், எப்படியாவது செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் நாங்களும் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

இணைப்புச் சாலை

***8604—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, பூதங்குடி ஊராட்சி, பூதங்குடி முதல் நெய்வாசல் வரை இணைப்புச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, பூதங்குடி ஊராட்சி, பூதங்குடி முதல் நெய்வாசல் வரை இணைப்புச் சாலை நடப்பு

2019 ஜூலை 3]

நிதியாண்டில் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அம்மாவின் வழியில் ஆட்சியையும், கட்சியையும் சிறப்பாக வழிநடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதங்குடி—நெய்வாசல் இணைப்புச் சாலை அமைத்துத் தரப்படும் என்று கூறிய அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மயிலாடுதுறை தொகுதியில் சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் அம்மாவினுடைய அருளாசியால் வெற்றி பெற்றிருக்கிறோம். அங்கு சாலைகள் மிகவும் மோசமாக உள்ளன. குறிப்பாக, அகரம்கீரங்குடி—முட்டம் சாலை, காளி—அதியமான்புருஷன் சாலை, பூதங்குடி—ஆத்தூர் சாலை, கடலங்குடி—திருமணஞ்சேரி சாலை, சோழம்பேட்டை—கட்டளைச்சேரி சாலை, நாரணமங்கலம்—திருவளப்புத்தூர் சாலை, நல்லத்துக்குடி—வி.ஐ.பி. சாலை என பல சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இந்தச் சாலைகள் உடனடியாக சீர் செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டாரம், பூதங்குடி ஊராட்சி, பூதங்குடி முதல் நெய்வாசல் வரை 330 மீட்டர் நீளமுள்ள இணைப்புச் சாலையினை தார்ச் சாலையாக அமைக்க, 12.30 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அந்தச் சாலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு சாலைகளைப் பற்றிக் கேட்டுள்ளார்கள். மயிலாடுதுறை தொகுதியில், 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான 3 ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் வாயிலாக 99 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11,737 பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், கடந்த 8 ஆண்டுகளில் மயிலாடுதுறை தொகுதியிலே ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் ரூ.86.88 கோடி மதிப்பீட்டில் 299 கிலோ மீட்டர் அளவிற்கு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலைகளைப் பொறுத்தவரையில், நிதிநிலைமையை அனுசரித்து, கண்டிப்பாக ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படும். அதிலே பழுதடைந்த சாலைகள் இருப்பின், உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘சாலை அமைத்துத் தரப்படும்’ என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும், புதிய பேருந்து நிலையம் தேவை என்பது மயிலாடுதுறை மக்களின் நீண்டநாள் கோரிக்கை. கடந்த 2–8–2018 அன்று ரூ.38.05 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் அங்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு கொள்கைரீதியாக அனுமதி வழங்கியுள்ளது. இதுவரையில் அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை. எனவே, மாண்புமிகு அம்மாவின் அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து, பேருந்து நிலையம் அமைத்துத் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, அது அந்தத் தொகுதியிலே முக்கியமான பிரச்சினை. அது நீண்ட கால கோரிக்கையாகவும்

2019 ஜூலை 3]

இருக்கிறது. கடந்த ஓராண்டுக்கு முன்னால் மத்திய அரசிடமிருந்து 14 பேருந்து நிலையங்களுக்கு நிதி கேட்டு கருத்துரு அனுப்பப்பட்டது. அது இன்றைக்குப் பரிசீலனையில் இருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதி நிலைமையை அனுசரித்து, மயிலாடுதுறைக்கு புதிய பேருந்து நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு கண்டிப்பாக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில், கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியுடன் பல கிராமங்கள் இணைக்கப்பட்டு, அது பேரூராட்சியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேரூராட்சியிலே நெடுங்காம்பூண்டிக்குப் போகின்ற சாலை, மேட்டுப்பாளையத்திற்குப் போகின்ற சாலை இவையெல்லாம் நீண்ட காலமாகப் போடப்படாமல் இருக்கின்றன. ஊராட்சிகளுக்கு,* Highways *துறைமூலம் அதிக அளவில் பணம் ஒதுக்கப்பட்டு சாலைகள் போடப்படுகின்றன. ஆனால், பேரூராட்சிகளுக்குச் சரியாக பணம் ஒதுக்கப்படாததால், இதுபோன்று, பேரூராட்சிகளோடு இணைந்திருக்கின்ற கிராமங்களுக்குச் சாலை வசதிகள் நீண்ட காலமாக இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பேரூராட்சிகளைக் கண்டறிந்து, அங்கு சாலைகளை அமைப்பதற்கு பேரூராட்சித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு ஒவ்வொரு பேரூராட்சியிலும் உள்ள இணைப்புச் சாலைகள், தார்ச் சாலைகளாக இல்லாததால், பேருந்துகள் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அரசு அதிலே கவனத்தைச் செலுத்த வேண்டும். அதேபோல, ஒன்றியங்களிலேயும் அதிக அளவில் சாலைகள் போடப்படாமல் இருக்கின்றன. இன்றைக்கு* Highways *துறை மூலமாக ஊரகச் சாலைகள் அதிகமாகப் போடப்படுகின்றன. ஆகவே, ஊரகச் சாலைகளையெல்லாம் நெடுஞ்சாலைகளோடு இணைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னால், பேரூராட்சியிலே அதிகமான அளவில் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. கடந்த 5 ஆண்டுகள் வரையில் பார்த்தீர்களென்றால், 1,376.45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 4,918 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அதைப்போல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்திலும்கூட, 3,015 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் 1,953 கோடி ரூபாய் மதிப்பீட்டில் போடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பேரூராட்சியிலும் மற்றும் உள்ள பேரூராட்சிகளிலும் நபார்டு திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்களின்மூலம் இந்த வருடமும் சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். பழுதடைந்த சாலைகள் இருந்தால், கண்டிப்பாக எடுக்கப்படும்.

அதேபோல், ஊராட்சி சாலைகளைப் பொறுத்தளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு சாதனைகளைப் படைத்து, இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கிறது. 2011–லே அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும்போது 1 இலட்சத்து 3 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்குத்தான் ஊரகச் சாலைகள் இருந்தன. அதற்குப் பின்னால், இப்போது ஒரு இலட்சத்து 49 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் போடப்பட்டுள்ளன. ஊராட்சிகளில் கிட்டத்தட்ட 45 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதைகள் புதியதாகக் கண்டறியப்பட்டு, சாலைப் பணிகளின்கீழ் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து நிதி ஒதுக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று, இன்றைக்குப் பல்வேறு திட்டங்கள் உள்ளன. பாரதப் பிரதமர் சாலை அமைக்கும் திட்டம்; அதில்கூட பார்த்தீர்களென்றால், நாம்தான் இந்தியாவிலேயே

2019 ஜூலை 3]

அதிகமாக நிதியைப் பெற்று, செய்துகொண்டிருக்கிறோம். இந்த வருடமும் நிறைய சாலைகளைக் கண்டறிந்து கொடுத்திருக்கிறோம். நபார்டு மூலமாகவும் சாலைகளை அமைக்கிறோம். இன்றைக்குக் குடிநீர்த் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளையெல்லாம் மேற்கொள்ளும்போது, சாலைகள் பழுதடைவது அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதி நிலைமையை அனுசரித்து, பழுதடைந்த சாலைகள் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

கால்நடை மருத்துவமனை

***16616—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, தொட்டியம் ஒன்றியம், நாகையநல்லூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், நாகையநல்லூரில் கால்நடை அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை துவங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகள் 3 ஆயிரத்திற்கும்மேல் இருந்தால் முதலில் கால்நடைக் கிளை நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும். பின்பு, கால்நடைகளின் அலகுகள் 5 ஆயிரத்திற்குமேல்